# தேவ வார்த்தை




தேவ வார்த்தையை போதிப்பது வேறு, பிரசங்கம் செய்வது வேறு. பிரசங்கம் செய்ய சில குறிப்புகளை தயார் செய்து அதன் மூலமாக எந்த தலைப்பிலும் பிரசங்கிக்கலாம். ஆனால் தேவனிடத்திலிருந்து பெற்ற வார்த்தையை வேத வசனத்தின் துணையோடு, இன்னும் சில ஆவிக்குரிய நூல்களில், செய்திகளின் துணையோடு விளக்கிக் கூறுவதே தேவ வார்த்தையை போதிப்பது ஆகும். இன்று பலர் கிறிஸ்தவ ஊழிய வட்டாரத்தில் அநேகம் பிரசங்கங்களை செய்கின்றனர். இன்னும் சிலர் புதுமையாக ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக வேதத்திற்கு ஒத்துவராத அது கூறாத காரியத்தை பிரசங்கம் சென்றனர். ஆனால் உண்மையான தேவ வார்த்தை அப்படிப்பட்டது அல்ல, அது மேன்மையானது அதைக் குறித்த சில சத்தியங்களை நாம் பின்வருமாறு காணலாம்.

முதலாவது தேவ வார்த்தையை போதிப்பது, மனிதர்களுக்கு ஏதாவது போதிக்கவேண்டும், புத்தி சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. செய்தியை அவர் கூற விரும்பும் மக்களுக்கு போதிப்பது ஆகும். அது ஒரு தனி நபருக்குக்காகவோ அல்லது, ஒரு தேசத்திற்குக்காகவோ அல்லது, முழு உலகத்திற்கும் கூட இருக்கலாம். சில நேரத்தில் விசுவாசம் குடும்பத்தாருக்கு மட்டும் அல்லது சபைக்கு மட்டும் போதிக்கலாம். தேவன் தமது வார்த்தையை வெளிப்படுத்தும் பொழுது அதை யாருக்கு கூற வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறார். இதை நாம் வேதாகமத்தில் அநேக இடங்களில் விசேஷமாக தீர்க்கதரிசன புத்தகங்களில் காணலாம். வேதத்தில் உள்ள ஒவ்வொரு வெளிப்பாடும், வார்த்தையும் எப்படி தேவ மனிதருக்கு அருளப்பட்டதோ அதே அடிப்படையில்தான் தேவன் இப்பொழுதும் அதை அருளுகிறார்.

**"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோ 3:16)**, எனவே இப்பொழுது தேவ வார்த்தையாக போதிக்கப்படும் எதுவும் வேதத்திலுள்ள ஏற்கனவே எழுதப்பட்ட சத்தியத்திற்கு ஒருபோதும் முரணாக இருக்காது. ஏனெனில்

இவை எல்லாம் ஒரே ஆவியானவரால் அருளப்படுகிறது. மேலும் அது வல்லமையுள்ளது. அந்த வார்த்தை யாருக்கு சொல்லப்பட வேண்டுமோ, அவர்களுக்கு அது சொல்லப்படும் பொழுது இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல அந்த வார்த்தைகள் செயல்படுகிறது. அது இரட்சிப்பை, ஒரு விடுதலையை அதைக் கேட்பவர்களுக்கு உண்டாக்குகிறது. அதைக் கேட்கும் தனி நபருக்கோ, சபைக்கோ, தேசத்திற்கோ ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறது.

இந்த வார்த்தையை பெற்று அறிவிக்கவே ஆண்டவர் நபர்களை தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் ஆரம்ப காலத்தில் தேவ வார்த்தையை எடுத்து போதித்த தேவ மனிதர்கள் கூட பிற்காலத்தில், சொந்த வார்த்தைகளை ஜனங்களின் தேவைக்கேற்ப பேச ஆரம்பித்துவிட்டனர். இதுவே எழுப்புதல் அக்னி குறைந்து போக காரணமாகும். தேவ வார்த்தையை பெற்று அக்னியைப் போல கேட்பவர்கள் இடத்தில் அதைக் கொண்டு வந்து சேர்த்தபொழுது, புற ஜாதி மக்கள் பாவத்தில் இருந்து மீட்கப்பட்டு இரட்சிக்கப்பட்டனர். சபைகள் பரிசுத்தத்தில் வளர்ந்து பெருகின, ஆச்சரியப்படும் வகையில் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் அற்புத சுகம் உண்டாயிற்று. உலக அரசாங்கங்களும், அதிகாரங்களும் அதை கண்டு கலங்கின. ஆனால் இப்பொழுதோ அனேக பிரசங்கிமார்கள் இடைவிடாமல் பிரசங்கிக்கின்றனர். யாருக்காகப் பிரசங்கிக்கிறோம் என்பதைக்கூட சரியாக அறியாமல் பிரசங்கிக்கின்றனர். இதனால் அதை கேட்பவர்களின் ஆவிக்குரிய வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை.

இதில் இன்னும் மோசமானது சிலருடைய பிரசங்கம் மாறுபாடானவைகளை போதித்து அநேகரை விசுவாசத்தை விட்டு வழிவிலக செய்கிறது. சத்தியத்திற்கு விரோதமாய் செயல்பட வைக்கிறது. பரலோகத்திற்கு நேராக நடத்திச்செல்லாமல் அதற்கு எதிர்திசையில் நடத்திச்செல்கிறது. எனவே அன்று ஆண்டவர், அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், அறுப்புக்கு எஜமான் வேலை ஆட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள் என்று கூறியது போல, இன்று உண்மையாய் தேவ வார்த்தையை போதிப்போர் எழும்ப வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். ஒரு பிரசங்கத்தை கேட்கும் பொழுது அது உண்மையாகவே தேவ வார்த்தையா, அல்லது வெறும் மனித அறிவின் போதனையா என்பதை, விளங்கிக் கொள்ள தேவ ஒத்தாசையை நாம் நாட வேண்டும். இந்தப் பொல்லாத கடைசி கால சூழ்நிலையில் வாழும் நாம் **“மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்களுக்கு” (அப் 20:29)** விலகி நம்மை காத்துக்கொள்ள வேண்டும், சபையையும் காத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முதலாவது நாம் தேவ வார்த்தையை, வேதாகமத்தை, உண்மையாய் நித்தமும் தியானித்து, தேவ உறவில் நம்மை காத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தேவனிடத்திலிருந்து, ஊழியர்களின் மூலமாய் நமக்கு அருளப்படும் தேவ வார்த்தைகள், நாம் ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் வளர, தேவனிடத்தில் கிட்டி சேர, பூரண புருஷராக நம்மை வழிநடத்தும். ஆமென், அல்லேலூயா.